முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

## எதிர்காலம் குறித்த

## இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

**பிலவ வருடம் புரட்டாசி மாதம் 24ம் திகதி முதல் புரட்டாசி மாதம் 31ம் திகதி வரை**

**(10.10.2021 ஞாயிறு முதல் 17.10.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அறம்கொண்டு உலகை மீட்க
   அவதாரம் புரிந்த அரங்கனே
   வரம்பெற்று நீ அருளுகின்ற
   வாழும் பூமி இந்தியா தமிழகம் தன்னில்
2. தன்னிலே பிலவ தரிவை திங்கள்
   தக்கஅறுநான்குதிகதிமேல் ஐயாறோர் திகதி வரை
   இன்னாளில் நடக்கும் நிகழ்வாக
   எதிர்கால பலன்குறித்த ஆசிதனை
3. ஆசிதனை அகத்தியனும் உரைப்பேன்
   அகிலமதில் இந்திய ஆளுமை
   நேசக்கரம் கொண்டு செயல்பட
   நிதிநிலவரம் வளரும்படியான திட்டம்
4. திட்டங்கள் தீட்டி செயல்பட
   தேசமதில் மாநில அரசுகளின்
   திட்டங்களில் கட்டுப்பாடுகளில்லா
   தேசாந்திர சுதந்திர இணக்கமான
5. இணக்கமான உரிமைகள் தனை
   எல்லோருக்கும் சமமாய் வழங்கி
   வணங்கும்படி சேவை ஆற்றிட
   வரிச்சுமைமை நீக்கி காத்திட
6. காத்திட தமிழகம் முதலான
   கண்டுரைப்பேன் அனைத்து மாநில வளர்ச்சி
   உத்தமமாய் தேறி இனிதே
   உலகமே வியக்க ஏற்றம் காணும்
7. காணவே கண்ணியம் மிகுந்த
   கடமை மீறா சேவையாக
   ஞானவான்கள் தலையீடும்
   ஞானமாக இந்திய தமிழக ஆட்சியில்

8. ஆட்சியில் இடம்பெற மாற்றம்
ஆன்மீக ஞான அரசியல் களமாக
மாட்சிமை கூட்டி வளர்ச்சியை
மக்களுக்குத் தரும் ஞானஆட்சியாக
9. ஆட்சியாக மாற்றம் காணும்
அச்சுறுத்தும் பேரிடர் அலைஒழிந்து
திட்டமுடன் பாதுகாப்பை பெறும்
தேசிகனார் வழிகாட்டல் அறியப்பட
10. அறியப்பட ஆளுமைகள் பணிந்து
ஆறுமுகா எனவணங்கி ஏற்கப்பட
வறுமை பின்னடைவு விலகியே
வளமை ஞானத்தலைமை அடைந்து உயரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் புரட்டாசி மாதம் 24ம் நாள் 10.10.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் புரட்டாசி மாதம் 31ம் நாள் 17.10.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகள் :

பொல்லா மாமாயையுள் அகப்பட்டு துன்பத்தில் உழன்று வாடும் கலியுக மக்களை தர்மபலம் கொண்டு மீட்டிடவே முருகப்பெருமானின் அம்சமாக அவதாரம் புரிந்த ஆறுமுக அரங்க மகா தேசிகனே எல்லையில்லா வரம் பெற்று மக்களுக்கு அருள் செய்து காக்கின்ற தாம் அவதரித்து வாழும் ஞானபூமியாம் இந்தியா தமிழகத்தில் பிலவ வருடம் புரட்டாசி மாதம் 24ம் நாள் 10.10.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் புரட்டாசி மாதம் 31ம் நாள் 17.10.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்திய தேசத்தை ஆட்சி புரிவோர் நாட்டினில் உள்ள எல்லா மாநில அரசுகளுடனும் நேசக்கரம் நீட்டி இணக்கமாய் செயல்பட்டும், மத்திய மாநில அரசுகளின் நிதி ஆதாரங்கள் பெருகிடும்படியாக திட்டங்களை தீட்டி நிதி நிலைமையை சீராக்கிட வேண்டும் மாநில அரசுகளின் நலத்திட்டங்களில் கட்டுப்பாடுகள் விதிக்காமல் அதனதன் சுதந்திரத்தை பாதிக்காமல் இணக்கமாய் மாநில அரசுகளின் உரிமைகளை எல்லா மாநில அரசுகளுக்கும் சமமாய் வழங்கி மக்கள் ஆட்சி புரிவோரை வணங்கி போற்றும் அளவிலே மக்களுக்கு சேவைகளை தன்னலமற்று செயல்பட்டு மக்கள் மீதுள்ள அதிக வரிச்சுமைகளை நீக்கி காத்திட வேண்டும். மத்திய அரசின் இணக்கமான இந்தவித செயல்பாடுகளினால் தமிழகம் உள்ளிட்ட எல்லா மாநிலங்களும் அற்புதமாய் முன்னேறி உலகமே வியக்குமாறு முன்னேறும்.

கண்ணியத்துடனும் கடமை மீறாமல் மக்கள் தொண்டே மகேசன் தொண்டென சேவை புரிகின்ற ஞானவான்களின் ஆலோசனைகளையும் ஆட்சி புரிவோர் ஏற்று செயல்பட அவர்களையும் ஆட்சியில் இடம் பெற செய்து ஆட்சி புரிய இந்திய அரசியல் ஆன்மீக ஞான

அரசியல் களமாக மாறி ஞானிகள் துணையுடன் வல்லமைகள் பெருகி வளர்ச்சி அடைந்து மக்கள் போற்றும் ஞான ஆட்சியாக மாற்றம் பெறும்.

நாட்டினில் ஞானிகள் துணையுடன் நடக்கும் ஞானஆட்சியின் விளைவால் நாட்டின் தர்மபலம் பெருகி நாட்டையே அச்சுறுத்தும் இயற்கை பேரிடர்களும் நச்சுக் கிருமி அல்லல்களும் நாட்டை விட்டு விலகி பாதுகாப்பு பெறும் தர்மத்தின் நெறி சொல்லி உண்மை ஆன்மீக கொள்கைகளை உலகிற்கு அளித்து உலகை நன்னெறிபடுத்தும் சற்குரு ஆறுமுக அரங்க மகா தேசிகனாரின் தூய நெறிக் கொள்கைகளை ஆளுவோரும் மக்களும் ஏற்றுக் கொண்டு முருகப்பெருமானை வழிபாடுகள் செய்து வரவர நாட்டை பற்றிய வறுமை விலகும் பொருளாதார சரிவுகள் நீங்கி வளமான நாடாக மாறுவதுடன் ஞானத்தலைமையை நாடு அடைந்து ஞானபூமியாக மாறி சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–